# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2032/29 - 2017 අගෝස්තු මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.08.17

*2032/29 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*எனது குறிப்பிலக்கம்.: 4/1/ඉ/අත්පත්/79.*
*காணி அமைச்சின் குறிப்பிலக்கம்: 4-3/9/2015/WS/30*

*பொது மக்களின் தேவைக்காக கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.*

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

*வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 711, மல்லவபிட்டிய கிராம அலுவலர் பிரிவில், தெலியகொன்ன கிராமத்திலமைந்த நில அளவை மாஅதிபரால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் K/2374 மற்றும் 2017.07.06 ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டிலக்கம் 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள "கோன்கஹமுல வத்த" என்னும் காணியின் சுமார் 0.0334 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க் காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு.*

*01.* **துண்டு இல.** *01* **- காணியின் பெயர்: கோன்கஹமுல வத்த; உரிமை கோருபவர்:** *திருமதி ரிஷானா மஹரூப், இலக்கம் 59, உடையார் மாவத்தை, தெலியகொன்ன;* **விஸ்தீரணம்:** *0.0334 ஹெக்டயார்.*

*வடக்கு: என். எச். ஹலால்தீன் உரிமைகோரும் கோன்கஹமுல வத்த; கிழக்கு: ஓடை; தெற்கு: ஹிஜ்ரா மாவத்தை; மேற்கு: நூர் சதிகா உரிமைகோரும் கோன்கஹமுல வத்த மற்றும் உம்மு சல்மா உரிமைகோரும் கோன்கஹமுல வத்த.*

*மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மல்லவபிட்டிய பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதி களாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.*

*ஆர். எம். பீ. ரத்நாயக்க,*
*பிரதேச செயலாளர்,*
*மல்லவபிட்டிய.*

*பிரதேச செயலகம்,*
*மல்லவபிட்டிய,*
*2017, ஓகத்து 15.*

*8 - 1083*



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*